Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி (16-12-1990) ஞாயிற்றுக்கிழமை ஓசை 291

## இரத்த தானம் செய்வதில் யாழ். வாசி சாதனை!

(யாழ்ப்பாணம்)

இரத்த தானம் செய்வதில் யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் சாதனை படைத்துள்ளார். நாற்பத்தைந்து வயது நிரம்பிய இவர், இதுவரை இருபத்தெட்டுத் (28) தடவைகள் இரத்த தானம் செய்துள்ளார்.

இலக்கம் 77, யாழ். பிரதான வீதியில் வாழும் எஸ். முருகேசன் என்பவரே மேற்படி இரத்த தானம் செய்து சாதனை படைத்தவராவார். இருபத்தெட்டுத் தடவைகள் இரத்ததானம் (4ஆம் பக்கம் பார்க்க)

# களனியில் சிதைந்த நிலையில் தமிழர், சிங்களவர் சடலங்கள்

(கொழும்பு)

களனி ஆற்றில் அப்பாவித்தமிழர், சிங்களவரின் சடலங்கள் இணைந்து மிதக்கின்றன. இவ்வாறு சடலங்களாக தமிழரும், சிங்களவரும் இணைவதில் சிறிலங்கா அரசின் பச்சைப்புலிகளும் தமிழ்க் குழுவான ஈ. பி. டி- பியும் இணைந்து செயலாற்றுகின்றன.

கடந்த சில மாதங்களாக தென் பகுதியில் அதிகரித்து வரும் ஜே. வி. பி யினரின் அரச விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதாகக் கூறும் அரசின் ஆயுதம் தாங்கிய சிங்களக் காடையர்கள் அப்பாவிச் சிங்கள மக்களைப் படுகொலை செய்து, சடலங்களை களனி ஆற்றில் வீசுகின்றனர்.

அதேபோல கடந்த பல மாதங்களாக சிறிலங்கா அரசுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ் இளைஞர்களை கைது செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ள டக்ளஸ் தேவானந்தா தலை (4 ஆம் பக்கம் பார்க்க)

## குவைத்திலிருந்து திரும்பிய தமிழர் நிவாரண திட்டத்தில் புறக்கணிப்பு

(கொழும்பு)

குவைத்தில் இருந்து நாடு திரும்பியவர்களுக்குச்சிறிலங்கா அரசு வழங்கி வரும் உதவி மற்றும் நிவாரண வேலைத் திட்டங்களில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள்.

குவைத்தில் இருந்து நாடு திரும்பிய பல சிங்கள, முஸ்லிம் தொழிலாளருக்கு அரசு நிவாரணப் பொருள்கள் வழங்கியதுடன் அவர்களுக்கு வேறு நாடுகளில் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொடுத்து அரச செலவிலேயே அனுப்பிவைத்துள்ளது. ஆனால் ஆயிரக்கணக்கான தமிழ் தொழிலாளர்கள் குவைத்தில் இருந்து நாடு (4 ஆம் பக்கம் பார்க்க)

## டில்லி ஆலோசனைப்படியே சென்னை இயங்கவேண்டும்

முக்கிய தேசிய பிரச்சினைகளில் மத்திய அரசின் ஆலோசனைக்கேற்பவே தமிழ்நாடு அரசாங்கம் செயற்படல் வேண்டுமென பிரதமர் சந்திரசேகர் மாநில அரசை அறிவுறுத்தி உள்ளார். உத்தரப்பிரதேசத்தில் ஜனதாதள் (எஸ்) கட்சியின் தொண்டர்களிடையே பேசும் போது பிரதமர் இவ்வாறு கூறினார். மத்திய அரசின் அணுகுமுறைகளிலிருந்து விலகித் தன்னிச்சையாகச் செயல்பட வேண்டாமென தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொண்டார்.

இலங்கைத் தமிழ் போரா (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு தேங்காய்; ஏழு கன்றுகள்

ஒரு தேங்காயில் ஏழு அதிசயக் கன்றுகள் முளைத்திருக்கும் விந்தை அளவெட்டி தெற்கு, ஆசிரியமணி செல்லையா வீதியில் வதியும் அமரர் செல்லையா ஆசிரியர் வளவில் நிகழ்ந்துள்ளது. 1985ஆம் ஆண்டு தேங்காய்கள் மேடையில் (4ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் அனைவரையும் கைது செய்யும் வரை நடவடிக்கை தொடரும்

(சென்னை)

இலங்கைப் போராளிகளுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், அவர்களை ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவுமே இலங்கைத் தமிழ்ப் போராளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. மத்திய, மாநில அரசுகள் தமக்குள் கலந்தாலோசித்தே இம்முடிவை மேற்கொண்டன.

இந்த முடிவையே தமிழகப் பொலிஸாரும் தற்போது செயற்படுத்தி வருகின்றனர் என்றும், இலங்கைப் போராளிகள் அனைவரையும் பிடிக்கும் வரை நடவடிக்கை தொடருமெனவும் முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

இவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நான் இப்போது அமைச்சர்; நினைத்தமாதிரி பேசமுடியாது

(சென்னை)

சுப்பிரமணியம் சுவாமி

தமிழகத்தின் கரையோர மாவட்டங்கள் தமிழக அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இல்லை என்றே கருதுகின்றேன் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சரான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார். தென் ஆற்காடு, இராமநாதபுரம், தஞ்சை ஆகிய கடலோர மாவட்டங்கள் ஆகியன இதில் குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் தடையின்றி நடமாடுவது பற்றிச் செய்தியாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் சுப்பிரமணியம்சுவாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சராவதற்குமுன்பு தி. மு. க. அரசை கலைக்க வேண்டும் என முன்னர் டாக்டர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதலால் கிளிநொச்சியில் பலர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறிலங்கா விமானப் படையின் ஹெலிகொப்ரர்களும், குண்டுவீச்சு விமானங்களும் நேற்றுப் பரவலாகத் தாக்குதல் நடாத்தியதில் பலர் காயமடைந்தனர். சில கட்டடங்களும் சேதமடைந்தன.

நேற்று முற்பகல் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் கிளிநொச்சி றோயல் கல்வி நிலையத்திற்கு அண்மையிலுள்ள குடியிருப்புக்களை நோக்கிக் குண்டுத் தாக்குதலை நடாத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நாரந்தனையில் குண்டுவீச்சிற்கு ஒருவர் பலி; ஒருவர் காயம்

(நல்லூர்)

செருக்கன் சந்தியில் (நாரந்தனை) நேற்று மாலை நான்கு மணியளவில் நடாத்தப்பட்ட விமானத்தாக்குதலில் அதே இடத்தைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். இதில் தங்கம்மா என்பவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரும் வழியிலேயே உயிர் துறந்தார். செல்வநாயகம் (72 வயது) என்பவர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது வீடும் முற்றாக சேதத்திற்கு உள்ளாகியது.

## பரந்தனில் இருவர் காயம்

(நல்லூர்)

நேற்றுக்காலை பதினொரு மணியளவில் பரந்தன் வீதியால் சென்றுகொண்டிருந்தவர்கள்மீது ஹெலி கன்மூடித் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க அதிபர் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சகல அரச திணைக்களங்களும் தமக்கு வேண்டிய நிதி மற்றும் ஏனைய தேவைகள் தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் ஊடாகவே சம்பந்தப்பட்ட அமைச்சிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

இவ்வாறு நேற்று செயலகத்தில் நடைபெற்ற திணைக்களத் தலைவர்களுக்கான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க)

## செஞ்சிலுவை அதிகாரிகளை மக்கள் வழி மறித்தனர்

(முல்லைத்தீவு)

சர்வதேசசெஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளைப்பொது மக்கள் முள்ளியவளையில் வைத்து வழிமறித்தனர்.

கடந்த திங்களன்று முல்லைத்தீவுமாவட்டத்திலுள்ள முள்ளியவளையில் இடம்பெற்ற இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது.

முல்லைத்திவுக்கு விஜயம் மேற்கொண்ட சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளின் வாகனங்கள் பொதுமக்களால் வழிமறிக்கப்பட்டது. செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளிடம் "முல்லைத்தீவில் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. இப்பகுதியில் இருக்கும் எந்தவொரு கூட்டுறவுச் சங்க சமாசத்திலும் உலர் உணவுகள் கையிருப்பில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

### விஜி

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினரின் உலங்குவானூர்தி தாக்குதல் நடத்திய போது எதிர்த் தாக்குதல் மேற்கொண்ட விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் விஜி (சுப்பிரமணியம் விஸ்வநாதன், கிளிநொச்சி) வீரமரணமடைந்தார்.

வீரமரணமடைந்த விஜிக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

## வலைப்பாடு இறங்கு துறையில் பொருள் இறக்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட "வலைப்பாடு" இறங்குதுறையில் கப்பல்மூலம் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவந்து இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள உணவுப்பற்றாக்குறையை ஓரளவு நீக்குவதற்கும் தற்போது பருத்தித்துறை இறங்குதுறையில் கடல் கொந்தளிப்பால் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான உணவுப்பொருள்களை எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள சிரமங்களைத் தொடர்ந்தும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி இறங்குதுறையை (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். "அரஸ்ஜவுளியகம்" 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R/888)

நத்தார், புதுவருட காட் வகைகள் அனைத்தும் விற்பனையாகிக்கொண்டு இருக்கின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். உங்கள் தெரிவுக்குமுந்துங்கள். அனைத்தும் புதிய டிசைன்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். நல்லூர், யாழ்ப்பாணம். (B-1718)

**லைடன் ரெக்ஸ்ரையில்ஸ் சென்ரர்**

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பீனாக்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (B1656)

**The Jaffna Education Centre**

யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்) O/L, A/L Spoken English Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியும் உண்டு. (B-1657)

**ரதிவோச் வேக்ஸ்**

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்:- எமது ஸ்தாபனம் இல. 44, 46, கஸ்தூரியார் வீதியில்மீண்டும் 1-12-90முதல் இயங்கி வருகின்றது தவிர, இல.12, பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையிலும் தொடர்ந்தும் இயங்கிவரும் என்பதையும் எமது வாடிக்கையாளருக்கும், சகல மணிக்கூடு பாவனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் (50 வருட கால நம்பிக்கைச் சின்னம் ரதிவோச் வேக்ஸ்) - நிர்வாகம். (B-1648)

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

**அறிவித்தல்**

பேராதனைப்பல்கலைக் கழக வெளிவாரிப்பரீட்சைக்கு விண்ணப்பித்த பின்வரும் பாட நெறிகளுக்கான மாணவர்கள் யாபேரும் 16-12-1990 ஞாயிறுகாலை10மணிக்கு தவறாது கல்லூரிக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்

இயக்குனர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(B/1733)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரஜனனம் | | வீரமரணம் |
|---|---|---|
| 17 - 03 - 1959 |  | 16 - 12 - 1986 |

### வீரவேங்கை தேவதாஸ்

**யோசவ்நாயகம் அன்ரன் தேவராஜா**
(பிரதேசப் பொறுப்பாளர், யாழ். கரையோரப் பகுதி)

நினைவுக் கோயிலில் நித்தம் எரியும்
நிர்மல ஜோதியே தேவதாஸ்......
நீ மறைந்து நாலாண்டு ஆகினும்
நிரந்தரமாய் வீற்றிருக்கின்றாய் எம் மனதில்

87, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

அன்புடன் நினைவு கூரும்
அம்மா, தங்கை, தம்பிமார், அண்ணா,
அண்ணி, மைத்துனர், மருமக்கள்;

(R-925)

## 43ஆம் நாள் நினைவு



கப்டன்
**அருந்ததி**
(சிவரஞ்சனி சண்முகநாதன்)

வீரஜனனம்
1967-10-23

வீரமரணம்
1990-11-04

நாயனமார்கட்டு
மக்கள்

(B/1731)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சொர்ணலிங்கம் டினேஸ்குமார்
(குட்டிக்கண்ணா)

தோற்றம்
16 - 08 - 86

மறைவு
16 - 12 - 87

எம் குலத்தில் ஆண் மகவாய் பிறந்து எமை எல்லாம் மகிழ்வித்து ஆண்டொன்றில் எமைப் பிரிந்து சென்ற எம் செல்வமே உம் சிரிப்பின்றி ஆண்டு மூன்று சென்றபோதும் அச்சிரிப்பொலி இன்றும் எம் காதுகளில் ஒலிக்குதய்யா. காணும் இடமெல்லாம் உம்திருவுருவைக் காணுகின்றோம். ஓடோடி வந்து மறுமுறையும் பிறந்திடுவாய் எம் வயிற்றில்.

உம் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்

தாய், தந்தை, சகோதரிகள், அச்சப்பா, அச்சம்மா, (சதாசிவம் குடும்பத்தினர்) அப்பப்பா, அப்பம்மா, சண்டிலிப்பாய் கனகரத்தினம் குடும்பத்தினர், பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி, மற்றும் உறவினர்கள்.

(B/1689)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

| விரஜனனம் | | விரமரணம் |
|---|---|---|
| 11 - 09 - 1969 |  | 16 - 06 - 1990 |

### மேஜர் சிங்கன்
(இராசையா மகேஸ்வரன்)

மாவீரனே!

மாங்குளத்து முகாமிற்குள் மதங்கொண்டு
பாய்ந்தவனே!
மார்பிலே குண்டேந்தி மண்ணுக்காய்
மாண்டவனே! - நீ
கால் பதித்த தடங்களிலே களப்புலிகள்
சென்றதனால் - அங்கு
தமிழ்க்கொடி பறக்குதடா;
உன்கனவுகள் பலிக்குதடா!

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரங்கள்,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு

(R/ 900)

## ஹோமியோபதி வைத்திய டிப்ளோமா வகுப்புகள்

## Diploma in Homoeopathy Medicine & Surgery

(22 வருடகால நீண்ட இடைவெளியின் பின்னர் 19-1-91இல் மீண்டும் யாழ் நகரில வகுப்புகள் ஆரம்பமாகின்றன.)

1. கல்வித் தகைமை: க.பொ.த. (சா/த) விஞ்ஞானம்/ சுகாதாரவியல் சித்தி.
2. வயது: 18 தொடக்கம் 40 வரை
3. விரிவுரைகள் யாவும் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும். போதனைக்கு இலகுவாக ஆங்கிலம், லத்தீன் மொழிகளும் உபயோகிக்கப்படும்.
4. காலம்: 3 வருடங்கள்
5. மருத்துவ சங்கத்தின் பதிவுக்கும் பரீட்சைக்கும் (வெளிவாரி) உரிய பாடத்திட்டங்கள்.
6. பரீட்சை முடிவில் தொழில் புரிவதற்காக டிப்ளோமா (D.H.M.S) சான்றிதழ் வழங்கப்படும்.
7. 1970ஆம் ஆண்டிற்குப் பின் பரீட்சைக்கு தோற்றாத சகல ஹோமியோபதி வைத்தியர்களுக்கும் விசேட வகுப்புகள் நடாத்தப்படும்.

உங்கள் பதிவுகட்கு:
மருத்துவக் கல்லூரி,
இல. 54, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகி
Dr. V. P. சுந்தரராஜன்
எஸ். எம். ஏ

(B/1720)

## தொழில்சார் ஆங்கில வகுப்புக்கள்

இழ்வருவோர்க்கான ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

- **Under Graduates**
- **Professional Students**
- **Officers**
- **Basic English**

மேலதிக விபரங்கட்கு

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, ST. PETER'S LANE, HOSPITAL ROAD, JAFFNA.

(B-1716)

### சிந்தனைக்கு

முதலில் நாம் மனிதர்களாய் இருக்க வேண்டும்; பிறகுதான், குடிமக்களாய் சட்டத்தை மதிக்கக் கற்பதைவிட, நியாயத்தை மதிக்க கற்பது தலையாயது.

— ஹென்றி டேவிட் தோரோ


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 16-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## காயம் - உள்ளங்கையில் கண்ணாடி தேடும் மோகமட்

இஸ்ரேலியர் விவகாரம் மீண்டும் சிறிலங்காவில் சர்ச்சைகிளப்பியுள்ளது. சிறிலங்காவில் பத்திற்கு மேற்பட்ட விசாமறுக்கப்பட்ட இஸ்ரேலியர்கள் இருக்கின்றார்கள் என்பது சபாநாயகர் எம். எச். மொகமட்டின் குற்றச்சாட்டாகும். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளை சிறிலங்கா பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா மறுத்துள்ளதோடு. இது சபாநாயகருக்கு ஒரு தேவையில்லாத விவகாரம் என்ற ரீதியிலும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், சபாநாயகர் எம். எச். மொகமட் இஸ்ரேலியர் சிறிலங்காவில் உள்ளனர் என்ற குற்றச்சாட்டை மீண்டும் தெரிவித்துள்ளதோடு இலங்கையில் தமிழ்-முஸ்லிம் கலவரங்கள் ஏற்படுவதற்கும், முஸ்லிம்கள் தாக்கப்படுவதற்கும் இஸ்ரேலியரே காரணம் எனக் குற்றமும் சாட்டியுள்ளார்.

இஸ்ரேலியர்கள் பொதுவாகவே இஸ்லாமியருக்கு எதிரானவர்கள் தான். அதனை இஸ்ரேலியர்களும் மறுக்கவுமில்லை; உலகிற்கு அது புரியாத விடயமுமல்ல. ஆனால் இலங்கையில் நடைபெறும் கலவரங்களுக்கு முழுதாக இஸ்ரேலியர்தான் காரணம் என்பதும், மொகமட் அவர்களின் இஸ்ரேல் எதிர்ப்பு பிரசாரங்களில் எந்தளவிற்கு உண்மையுள்ளது என்பதுதான் எமது அக்கறைக்குரியது.

முன்னாள் சிறிலங்கா ஜனாபதிதி தமிழர்களை அழிப்பதற்கு எந்தப் பேயுடனும் கூட்டுச் சேரத் தயார் எனக் கூறிக்கொண்டு மொஸாட்டினரை சிறிலங்காவிற்கு அழைத்தபோது காத்தான்குடியிலும், புத்தளத்திலும் இந்த நடவடிக்கைக்கு பலமான எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது. ஆனால் மொகமட் போன்ற கொழும்பு தலைமைகளின் துணையுடன் அந்த எதிர்ப்புகளை சிறிலங்கா அரசாங்கம் மழுங்கடித்தது. அதேவேளை முஸ்லிம்களால் மொஸாட்டிற்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட எதிர் நடவடிக்கைகளைவிட தமிழரினால் மொஸாட் டிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அதிகமானதாகும். இந்தவேளையில் அரசாங்கமும் மொஸாட்டினரும் சேர்ந்து தமிழரை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதில், மொஸாட்டினால் பயிற்றப்பட்ட விசேட அதிரடிப் பொலிஸ் படைப்பிரிவு முக்கிய பங்கு ஆற்றியது. இந்தவிசேட படைப்பிரிவில் பல முஸ்லிம்களும் இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இன்றைய சபாநாயகர் அன்று போக்குவரத்து அமைச்சராக இருந்தபோது அவருக்கும் மொஸாட்டிற்குமிடையில் தனிப்பட்ட ரீதியில் தொடர்புகள் இருந்ததாக அந்தக் காலத்தில் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. எம். எச். மொகமட் அவர்களும் மொஸாட் அதிகாரிகளும் பாகிஸ்தானில் சந்தித்துக் கொண்டதாகவும் எம். எச். மொகமட் ஒரு மொஸாட் உளவாளி எனவும் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த நிலையில், சபாநாயகர் எச். எம். மொகமட் இன்று இஸ்ரேலியர்கள் வருகை பற்றிக் கண்டனம் தெரிவிக்கின்றார். இதற்கு முஸ்லிம்களுக்கிடையில் இன்று தோன்றியுள்ள புதிய கட்சிகளினால் தமது செல்வாக்கு மழுங்கடிக்கப்படலாம் என்ற அச்சமே காரணமாக இருக்கலாம்.

இலங்கையில், இனப்பிரச்சினை கூர்மை அடையத் தொடங்கியதில் இருந்து சிறிலங்கா அரசாங்கம் முஸ்லிம்களை தமிழருக்கு எதிராக பயன்படுத்தி வந்தது. அதிலும் குறிப்பாக கிழக்கில் பெரியளவில் நடைபெற்றது. இதன் காரணமாக முஸ்லிம்கள் தமிழர் உறவுகள் பாதிக்கப்பட்டு அடிக்கடி கலவரங்கள் ஏற்பட்டு வந்தன

இந்த நிலையில் இஸ்ரேலியரின் வருகையினால் தான் முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர் என்று மொகமட் கூறுவது தவறாகும். கிழக்கு மாகாணத்தில் தமிழரின் போராட்டத்திற்கு எதிராகவும், தமிழருக்கு எதிராகவும் சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்து முஸ்லிம்கள் கலவரங்களைத் தோற்றுவித்தார்களே ஒழிய முஸ்லிம்கள் தமிழர்களால் தாக்கப்பட்டதாக இல்லை. அதாவது அரசாங்கத்தின் திட்டத்தின்படி கலவரங்கள் நடை பெற்றனவே ஒழிய தமிழர்களால் கலவரங்கள் ஏற்பட வில்லை.

இந்நிலையில், சபாநாயகர் எம். எச். மொகமட் கலவரங்களுக்குக் காரணமான அரசாங்கத்தைக் கண்டிக்க வேண்டுமே ஒழிய, இஸ்ரேல் மீதோ மொஸாட் மீதோ குற்றம் சுமத்திப் பயனில்லை: தனக்கு முன்னால் இருக்கும் இஸ்ரேலியர்களை அழைத்து வந்தவர்களை விட்டுவிட்டு, மறைவாகவுள்ள மொசாட்டைப்பற்றி சபாநாயகர் குற்றம் சாட்டி ஆகப்போவது ஒன்றுமில்லை.

பதவியும் வேண்டும், முஸ்லிம்களின் தலைமையும் வேண்டுமானால் சபாநாயகர் இவ்வாறான போலி வேஷங்களைப் போட்டுத்தான் ஆகவேண்டும். ஆனால் நியாயங்களின் முன் வேஷங்கள் நீண்டகாலம் நிலைத்து நிற்காது என்பதை சபாநாயகர் அவர்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

## தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் முப்பது வருடங்களின் பின் நாடு திரும்பினார்

(டர்பன்)

தென்ஆபிரிக்க இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக போராடியவரும் அந்த போராட்டத்தை முன்னின்று நடாத்திய ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏ.என்.சி.) இயக்கத்தின் தலைவருமான ஒலிவர் டம்போ முப்பது வருட காலத்தின்பின் தமது தாயகம் திரும்பி உள்ளதை தொடர்ந்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் முதலாவது தேசிய மாநாடு தென்ஆபிரிக்காவில் நடைபெற உள்ளது.

இந்த தேசிய மாநாட்டில் கறுப்பு இன குழுக்களிடையே இடம்பெறும் மோதல்களை சுமூக நிலைக்கு கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்காவிடம் உதவி பெற பாகிஸ்தான் பேச்சுவார்த்தை

(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவின் பொருளாதாரமற்றும்ராணுவஉதவியை மீண்டும் பெறுவது குறித்து பாகிஸ்தான் அரசாங்கம்அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சக அதிகாரிகளும் அமெரிக்க அதிகாரிகளும் இதுபற்றி பேச்சுவார்த்தைநடத்தினர்.

இந்த வருடம் ஒக்டோபரில் பாகிஸ்தானுக்கு வழங்கவிருந்த 60 கோடி டொலர் உதவி பாகிஸ்தான் அணு ஆயுதம் செய்கிறது என்பதால் அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷினால் மறுக்கப்பட்டது தெரிந்ததே.

## உயர் அதிகாரிகள் மட்டத்தில் இந்தியாவில் பதவி மாறுதல்கள்

(டில்லி)

இந்தியாவில் திரு. சந்திரசேகர் பிரதமராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து அரசாங்க உயர் அதிகாரிகள் மட்டத்தில் பதவி மாறுதல்கள், மற்றும் இடமாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக மாநிலங்களின் ஆளுநர்கள், மற்றும் துணைநிலை ஆளுநர்கள் சிலர் இராஜினாமா செய்துள்ளனர். சிலர் இடமாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக பாண்டிச்சேரி மாநிலத்தின் துணைநிலை ஆளுநர் திருமதி சந்திராவதி இராஜினாமாச் செய்துள்ளார். இமாசலப் பிரதேச ஆளுநர், கேரளாவின் ஆளுநராக இடமாற்றம் பெற்றுள்ளார் பஞ்சாப்பிற்கு புதிய ஆளுனர் நியமிக்கப்பட்டிருக்கிறார். புதுடில்லிக்கு புதிய துணைநிலை ஆளுநர் பொறுப்பேற்றிருக்கிறார். அந்தமான், நிக்கோபார் தீவுகளின் நிர்வாகம் தமிழக ஆளுநரின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கோவாவில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

## கோவாவில் ஜனாதிபதி ஆட்சி

(டில்லி)

இந்திய மாநிலங்களில் ஒன்றான கோவாவில் சட்டசபை இடை நிறுத்தப்பட்டு ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. சட்டசபையில் தமது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க மாநில அரசாங்கம் தவறியமையினாலேயே ஜனாதிபதி ஆட்சிப் பிரகடனம் செய்யப்பட்டு இருக்கின்றது.

## கூட்டுறவுச் சங்க புதிய கிளை

(நாது நிருபர்)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் நாயன் மார்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலையக் கட்டிடத்தில் புதிய கிளையொன்றை திறந்துள்ளனர். நேற்று முன்தினம் இக்கடை திறப்புவிழா இடம் பெற்றது. நல்லூர் உதவி அரசாங்க அதிபர், நல்லூர் கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்கள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டுறவுப் பொறுப்பாளர் உட்படப் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

## போதனா வைத்தியசாலையும் செஞ்சிலுவை சங்கத்தினரும்

ஆசிரியர்
ஈழநாதம்

ச. தே. செ. சங்கத்தினர் யாழ். போதனா வைத்தியசாலையை பொறுப்பேற்று மீள திறந்தது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை உண்டு பண்ணியது வியப்பில்லை. ஆனால்செஞ்சிலுவை சங்கத்தினரின் போக்குகளும் தமிழ் மக்கள் மீது காட்டும் புதிய முறைகளும் தமிழ் மக்களை சந்தேகமுறச் செய்கின்றன.

போதனா வைத்தியசாலை திறந்து விட்டோம் என்று பெயரளவில் சொன்னாலும் இன்னமும் மருந்துகளோ அவசர சிகிச்சையோ அளிக்கக் கூடிய வசதியில்லை. செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள் தமது பணி எதனையும் செய்வதில்லை. அவர்கள் பெயரளவில் தாம் யார் எனக்காட்டிக் கொள்கிறார்களே ஒழிய வேறு எதுவும் உருப்படியாக செய்யவில்லை. ஆஸ்பத்திரி ஊழியர்கள் கூட இரவில் இருப்பதில்லை. நோயாளரை பராமரிக்கக் கூடச் செல்வதில்லை. ஊழியர்களின் வருகை குறைவாக இருக்கலாம் ஆனால் செஞ்சிலுவை சங்கம் என்ன செய்கின்றது! பாதுகாப்பு வலயத்திற்காக போடப்பட்ட மின்குமிழ்கள் இரவில் ஒளிர்வதை அவதானிக்க இரண்டு வாகனங்களில் செல்கிறார்கள். இது எதற்காக? ஊழியர்களின் வருகையை அதிகப்படுத்த வாகன வசதி செய்யாது, தமது சுகபோகத்திற்காக வீதி உலா வருகின்றனர். எத்தனையோ நோயாளர்கள் வாகன வசதி இன்றி தவிக்கின்றனர். ஏன் விமான தாக்குதல் நடந்த இடங்களில் கூட காயமுற்றவர்களை ஏற்றிவரச் செல்வதில்லை. வெறும் பெயரளவில் மாத்திரம் இருப்பதில் பயன் ஏது? இன்று இந்த மண்ணில் இரு கர்ப்பிணிப் பெண்கள் வாகன வசதியின்றி இறந்துள்ளனர். இப்படியாக எத்தனையோ மக்கள் வாகன வசதியின்றி இறந்துள்ள இந்நேரத்தில் செஞ்சிலுவை சங்கம் தான் மக்களுக்கு என்ன செய்துள்ளது?

நோயாளிகளை பார்வையிட ஒருவருக்குமட்டும் தான் அனுமதி வழங்கியுள்ளது இது எதற்காக? ஒரு நோயாளியை பார்க்க குறிக்கப்பட்ட நேரத்தில் உறவினர்கள் வருகின்றனர். அவர்கள் எல்லாம் ஒருவரின் ''பாஸ்'' உடன் மாறி மாறி பார்க்க வேண்டிய துரப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதுவும் ஒருமணித்தியாலத்துக்குள் என்றகால அவகாசமே. இது ஏன்? நோயாளியை பார்வையிட வரும் எவரும் செஞ்சிலுவை சங்கத்தினரின் சோதனைக்கு உள்ளாகவேண்டிய ஓர்நிலை. சோதனை என்பதுஎதற்காக? மக்கள் என்ன எல்லோருக்கும் வெறும் பொம்மைகளா!

ஆஸ்பத்திரி வளவினுள் ஆயுதம் தரித்த எக்குழுவையும் அனுமதிப்பதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஏற்றுக் கொள்ளதொன்றே! ஆனால் அன்றொரு நாள் விடுதலைப் புலிகள் காயமுற்ற தமது உறுப்பினரை கொண்டு வந்தபோது செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள் அவர்களை உள்ளே விட மறுத்தனர். எதற்காக? அவர்களுக்கு அனுமதிஇல்லைஎன்பதற்காகவா! அல்லது அவர்கள் ஆயுதம் தரித்து இராணுவ சீருடையில் நின்றனர் என்பதற்காகவா! ஆனால் அவர்கள் அன்று சீருடையில் வந்தவராயினும் ஆயுதம் ஏதும் வைத்திருக்கவில்லை. போர்க்கால சூழலான இப்போது விடுதலைப்புலிகள் எதிரியுடன் போராடி காயமடைந்தவர்களை கொண்டு வர வேண்டும். அப்போது அவர்கள் சீருடை மாற்றி வருவது என்பது காயமடைந்த போராளியின் உயிர் போனபின்பே முடியும். இவ்வாறான நிலையில் செஞ்சிலுவை சங்கத்தினர் அவர்களை உள்ளே விடாது தடுப்பது தமிழ் மக்களையும் அவர்களின் காவலர்களான விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசுடன் சேர்ந்து அழித்தொழிக்கும் திட்டமே! அல்லாவிடின காயமுற்றவர்களை ஏற்றுக் கொள்ள தகுந்த ஒழுங்குடன் செஞ்சிலுவை சங்கத்தினர் ஆஸ்பத்திரி வாசலில் நிற்க வேண்டும். அதைவிட்டு விட்டு விடுதலைப்புலிகளை ஏற்க மறுப்பது ஏன்? விடுதலைப் புலிகள் மக்களிடம் இருந்து வேறுபட்டவர்களா? அல்லது விடுதலைப் புலிகளை மக்களிடம் இருந்துபிரிப்பதற்காகவா? இது எதற்காக ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயம் அமைத்து ஆஸ்பத்திரியை இறந்த அன்று விமான தாக்குதல் பாதுகாப்பு வலயத்திற்குள் நடத்தது மக்களை சந்தேகக் கண்ணோடு நோக்கச்செய்கின்றது ஆகவே செஞ்சிலுவை சங்கத்தினர் இனியும் இப்படியான சந்தேகப் படத்தக்கதான செயலை விட்டு எமது மக்களை காக்க என்றும் ஒரு பக்கம் சாராமல் உங்கள் சேவையை ஆற்றவேண்டும்.

தி. நகுலேஸ்வரன்
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

அமெரிக்கா எதிர்க்கின்ற போதும்

# சர்வதேச சமாதான மாநாடு கூட்டப்படல் வேண்டும்

(ரோம்)

அமெரிக்கா எதிர்ப்பு தெரிவிக்கின்ற போதிலும் மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பான சர்வதேச சமாதான மாநாடு கூட்டப்படல் வேண்டும் என்று ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ரோமாபுரியில் இன்று முடிவடையும் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இத்தகைய மாநாடு ஒன்று நடத்தப்படல் வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் சோவியத் யூனியனுக்கு 240கோடி டொலர்களை உதவி வழங்க அனுமதி அளித்த ஐரோப்பிய சமூக நாடுகளின் தலைவர்கள் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் பலத்திற்கு ஏற்ப அரசியல் நிலைப்பாட்டை வகுப்பதற்கான திட்டமொன்றில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

# நேபாளத்திற்குள் இந்திய சி. ஆர். பி. எவ். அத்துமீறல்

(காத்மண்டு)

நேபாள நாட்டு எல்லைக்குள் இந்தியப் படையினர் அத்துமீறிய சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நேபாளம் - இந்திய எல்லையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியொன்றில் கடந்த சில தினங்களுக்கு முன்பு சோதனைக்காக தடுக்கப்பட்ட சிலர் அதனை மீறி நேபாளிய எல்லையை ஊடறுத்து நேபாளக் கிராமம் ஒன்றுக்குள் புகுந்து கொண்டனர்.

அவர்களைத் தொடர்ந்து துரத்திச்சென்ற இந்தியாவின் சி. ஆர். பி எப்பினர் நேபாளக் கிராமத்திற்குள் அத்துமீறிப் புகுந்து ஐந்துபேரைக் கைதுசெய்தனர். அவர்களில் நால்வர் நேபாளியர் என்பது பின்னர் தெரியவந்தது.

---

ஒரு தேங்காய்

முளைக்க வைத்தபோது ஒரு தேங்காயிலிருந்து ஏழு முளைகள் தோன்றியுள்ளதாகவும், தாம் அதனை மட்டும் விட்டுவிட்டு ஏனைய தென்னங் கன்றுகளை அவ்விடத்திலிருந்தும் பெயர்த்து விட்டதாகவும் மேற்படி வீட்டுக்காரர் கூறியுள்ளார்கள். தென்னங் கன்றுகளை நேரில் பார்த்தவர் அவை ஆரோக்கியமாக வளர்வதாகவும் நிருபரிடம் தெரிவித்தார்.

---

இரத்த தானம்

செய்தமைக்காக யாழ் போதனா வைத்தியசாலை இரத்தவங்கி அவரைக் கௌரவிக்கும்முகமாக வெற்றிப்பதக்கம் ஒன்றை வழங்க முன்வந்த போதிலும், தான் பதக்கங்களைப்பெறுவதற்காக இரத்த தானம் செய்ய முன்வரவில்லை என்ற பெருந்தன்மையுடன் பதக்கம் எதையும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

யாழ் போதனா வைத்தியசாலை இரத்தவங்கி அதிகாரி இதுபற்றிக் கருத்துத்தெரிவிக்கையில் நானும் பல வருடங்களாக மருத்துவ சேவையில் இருக்கின்றேன். எனக்குத் தெரிந்தவரை 'ல் இவரே மிக அதிக தடவைகள் இரத்ததானம் செய்துள்ளார் என்று கூறினார். (க)

---

குவைத்தில் இருந்து

திரும்பிப் பல மாதங்கள் ஆகியும் இவர்களுக்கு எந்தவிதமான அரச நிவாரணமும் வழங்கப்படாததுடன் இவர்களுக்கு வேறு நாடுகளில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க எந்த முயற்சியையும் அரசு இதுவரை எடுக்கவில்லை. நாடுதிரும்பிய பல தமிழர்கள் கொழும்பில் மட்டும் நான்கு முகாம்களில் மிகக் குறைந்த வசதிகளுடன் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களின் எதிர்காலம் தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. (க)

---

கைது செய்யும்

படவில்லை என்றும், பயணியர் விடுதிகளிலும், பொலிஸாரின் பயிற்சிப் பாடசாலை மையங்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தமிழக அரசின் செய்திக் குறிப்பு ஒன்று கூறியுள்ளது.

---

நான் இப்போது

சுவாமி கூறிவந்ததை செய்தியாளர்கள் நினைவுபடுத்திய போது. இப்போது நான் ஒரு அமைச்சர் இரகசியக் காப்புப் பிரமாணம் எடுத்துள்ளேன். ஆதலால் நினைத்த மாதிரி எதையும் பேசிவிட முடியாது எனப் பதிலளித்தார். மேலும் பேசிய அவர் இலங்கைத் தமிழர்பிரச்சினையை நான்மறக்க வில்லை எனது சக்திக்கு உட்பட்ட அனைத்தையும் செய்வேன். ஆனால் எனது சக்தி அப்படி ஒன்றும் பெரிதல்ல என்றார்

---

## மரண அறிவித்தல்

### திரு.நாகமுத்து கந்தசாமி

திரு.நாகமுத்து கந்தசாமி அவர்கள்காலமானார் அன்னார் சிறிலங்கா புத்தகசாலை உரிமையாளரும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜேந்திரன், யோகேந்திரன் (லண்டன்), சிவனேந்திரன் (லண்டன்), சுஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரஞ்சினி, மங்கை (லண்டன்) ஆகியோரது அன்பு மாமனாரும், பிரசன்னா,பிரவீன் ஆகியோரது அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமச் சடங்குகள் 16-12-1990 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்3மணி அளவில் நடைபெற்றுப்புதவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்குஎடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.

14, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க. இராஜேந்திரன்
(R/936)

# திருட்டுப் போன சைக்கிள் 3 நாளின் பின் பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள சைக்கிள் பாதுகாப்பில் இருந்து திருடப்பட்ட சைக்கிள் மூன்று தினங்களின் பின் சைக்கிள் பாதுகாவலராலேயே பிடிக்கப்பட்டது.

சைக்கிள் பாதுகாவலர் திருட்டுப்போன சைக்கிளை மூன்றாம் நாள் திருடியவர் சந்தியொன்றில் வைத்துப் பேரம் பேசும்போது கையும் மெய்யுமாகப் பிடித்தார்.

பின்னர் இவர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டபோது மேலும் நான்கு சைக்கிள் திருட்டை ஒப்புக் கொண்டார். அதேவேளை ஆஸ்பத்திரி மீளத் திறக்கப்பட்டதில் இருந்து எட்டிற்கு மேல் சைக்கிள் பூட்டுக்கள் உடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (85)

---

களனியில்

மையிலான ஈ. பி. டீ. பி குழுவினரும் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தங்கியிருக்கும் தமிழர்களைக் கைது செய்து படுகொலை செய்து சடலங்களை களனி ஆற்றில் வீசுகின்றனர்.

இதனால் தற்போது களனி ஆற்றில் மனித சடலங்களை தினமும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

கடந்த வாரம் பாராளுமன்ற அமர்வு ஒன்றின்போது வாசுதேவ நாணயக்காரா களனி ஆற்றில் மிதந்து வரும் மனித சடலங்கள் பற்றி பிரஸ்தாபித்தபோது, அது பற்றிய விபரங்களை பாதுகாப்பு காரணங்களுக்காக வெளியிட முடியாது என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ரஞ்சன் பதிலளித்தார்.

கடந்த இரு மாத குறுகிய காலப் பகுதியில் மட்டும் இருநூறுக்கும் மேற்பட்ட சடலங்கள் களனி ஆற்றில் மிதந்து வந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

டில்லி

ளிகளின் இருப்பிடங்கள் மீது காவல்துறையினர் இரண்டாவது நாளாக நேற்றும் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் திடீர்ச் சோதனை செய்தனர் சென்னை, செங்கைஅண்ணா, திருச்சி, சேலம், இராமநாதபுரம் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட நேற்றைய சோதனைகளில் இதர போராளிக் குழுக்களைச் சேர்ந்த 86 பேர் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் 29 பேர் ஈ.பி ஆர் எல். எப்ஐச் சேர்ந்தவர்களாவர். மற்றும் 22 பேர் ஈ. என். டி. எல். எப், 18 பேர் புளொட், 1 ஈரோஸ், ரெலோவின் இரண்டு குழுக்களைச் சேர்ந்த 16 பேரும் அடங்குவர் எனத் தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது. இந்தச் சோதனைகளின் போது ஒரு உயர் சக்தியுள்ள ஒலிபரப்பி, அதிவேக விசைப்படகுகளுக்கான இரண்டு எஞ்ஜின்கள், மூன்று புகைப்படக்கருவிகள், ஒரு ஒலிப்பதிவு நாடாக்கருவி, ஒரு ஜீப், ஒரு மோட்டார் சைக்கிள், தட்டச்சு இயந்திரம் ஒன்று, மின்னணுத் தொலைபேசி ஒன்று, ஒரு ஜெனரேட்டர், 9. எம். எம் துப்பாக்கி ரவைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

திருச்சியில் இன்று புளொட் இயக்கத்தைச் சேர்ந்த 4 பேரும், ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த 6 பேரும் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த நால்வரும் ஏற்கனவே பயங்கரவாதிகள் குண்டர் தடுப்பு சட்டத்தின்கீழ் காவலில் ஓராண்டு வைக்கப்பட்டிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

வட்டுக்கோட்டையில்

# குண்டுவீச்சால் ஒருவர் காயம்; சில கட்டடங்கள் சேதம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி சிறிலங்கா விமானப் படை குண்டுவீச்சு விமானங்கள் இருதடவைகள் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் காயமடைந்தார். சில கட்டடங்கள் சேதமடைந்தன.

நேற்றுமாலை இந்தப்பகுதியில் பலமுறை வட்டமிட்ட இருகுண்டுவீச்சு விமானங்கள் இரண்டு தடவைகள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்திய போது வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள சில குடியிருப்புக்கள் சேதமடைந்ததுடன் வசந்தகுமாரி(21வயது) என்ற இளம்பெண் படுகாயம் அடைந்தார்.

இந்தப் பகுதியில் இதற்கு முன்னரும் பலதடவைகள் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஹெலிதாக்கு; ஒருவர் காயம்

(தண்ணீருற்று)

முல்லைத்தீவு தண்ணீருற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் ஹெலிகொப்டர் மேற்கொண்ட தாக்குதலினால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அருள் தவராசா (வயது 23) பலத்த காயமடைந்தார். சைக்கிளும் சிறு சேதத்திற்கு உள்ளானது. (85)

---

செஞ்சிலுவை

இல்லை. வைத்தியசாலைகளில் போதிய மருத்துவ வசதிகள் இல்லை. கொக்கிளாய், அளம்பில், தண்ணீருற்று, முள்ளியவளை, ஒட்டுசுட்டான் பகுதிகளில் இருந்து சுமார் பதினைந்துமைல்களுக்கப்பால் இருக்கும் புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்கு கடும் நோயாளிகளை எடுத்துச்செல்ல வாகன வசதி எதுவும் இல்லை. அவசர தேவைக்குப் பயன்படுத்தக்கூடிய வாகனங்கள் எதுவும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் கூட இல்லை. எனவே முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு உதவுங்கள்'' என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது

அதற்குப் பதிலளித்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த பெண் அதிகாரியொருவர் ''உணவுத் தட்டுப்பாட்டைப்பற்றி அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் எம்மிடம் எடுத்துக் கூறவில்லை.முல்லைத்தீவுக் கடற்பிராந்தியத்தின் காலநிலை பற்றியும் கூறுவதில்லை.மருத்துவ வசதியீனங்கள் பற்றி எமக்குச் சரியான தரவுகள் தரப்படுவதில்லை எனக் கூறியதுடன் ''கப்பலை அனுப்ப ஒழுங்கு செய்யுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறார்கள்'' எனவும் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறைபாடுகளை எமக்குத் தெளிவுபடுத்திசரியான தகவல்களைத் தந்தால் பொது மக்களுக்கு நாம் உதவத் தயாராக இருக்கிறோம் என அந்த அதிகாரி உறுதி கூறியதைத் தொடர்ந்துபொது மக்கள்வழிமறிப்பைக் கைவிட்டனர்.(85)

---

விமானத்

தியதில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன. இப்பகுதி மக்கள் பதுங்குகுழிகளில் தஞ்சமடைந்தமையால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

நேற்று முழுநாளும் சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்ரர்கள் குடியிருப்புக்களை நோக்கிப் பரவலாகக் கலிபர் தாக்குதலை நடாத்தின.

இத்தாக்குதலில் கு.தவமணி (52), இவரது மகன் கு.சுபேஸ்கரன் 21) ஆகியோர் பலத்த காயமடைந்தனர். இவர்களைவிட மேலும் சிலர் சிறு காயங்களுக்குட்பட்டனர்.(க)

## சுண்டிக் குளத்தில் குண்டு வீச்சு

சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையின் இரண்டு விமானங்கள் நேற்று குண்டு வீச்சில் ஈடுபட்டன. இந்தச்செய்தி அச்சுக்குப் போகும்வரை சேத விபரம் தெரியவரவில்லை.

## ஷெல் தாக்கு

(தெல்லிப்பளை)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை கீரிமலைப் பகுதியை நோக்கிப் பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயமும் அருகிலிருந்த சில வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன. (ச)

## நொச்சி மோட்டையில் ஒருவர் காயம்

வவுனியா மாவட்டத்தில் நொச்சிமோட்டைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்டர்கள் கலிபர் தாக்குதல் நடாத்தியதில் ஒருவர் காயமடைந்தார் பல வாகனங்கள் சேதமடைந்தன.

நேற்று நண்பகல் 12.00 மணியளவில் நொச்சி மோட்டை சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொது மக்கள் பிரயாணம் செய்யும் வாகனங்களை நோக்கி சரமாரியாக கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் த புஸ்பராஜா (வயது 25) என்பவர் பலத்த காயமடைந்தார். அப்பகுதியில் நின்ற ஐந்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் பலத்த சேதமடைந்தன . (க)

## இன்று விசேட பொதுக் கூட்டம்

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு சமாசத் தலைமைச் செயலகத்தில் நடைபெற இருக்கின்றது.

வரவு செலவுத் திட்டம் பற்றியும் இங்கு ஆராயப்பட இருப்பதால் சகல அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகளையும் தவறாது சமுகம் கொடுக்கும்படி தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

---

வலைப்பாடு

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் நேரடியாக பார்வையிட்டபின்னர் அடுத்து வடபகுதிக்கு வரும் கப்பல்கள் இந்த இறங்குதுறையில் பொருள்களை இறக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

---

பரந்தனில்

தனமான தாக்குதலை நடத்தியது.

இந்தத் தாக்குதலில் வீதியால் சென்றுகொண்டிருந்த பலர் வீதி ஓரத்தில் பாதுகாப்பை தேடிக்கொண்ட போதிலும் திருமதி குலசேகரம் (49 வயது), சுபேசன் ஆகியோர் பலத்த காயத்துக்கு உள்ளாகினர். (85)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.